செ.வெ.எண்: 04/2019 நாள்: 01.10.2019

# பத்திரிக்கைச் செய்தி

திருப்பூர் மாவட்ட சமூக நல அலுவலகத்தின் மூலம் மகிளா **"சக்தி கேந்திரா"** திட்டத்தின் கீழ் கிராமப்புற மகளிர்களுக்கு திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு, ஆற்றல், ஆரோக்கியம் மற்றும் ஊட்டச் சத்து போன்ற திறன்களை வழங்க அரசாங்கத்தால் ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, இத்திட்டத்தில் பணிபுரிய கீழ்க்கண்ட தகுதிவாய்ந்த திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

மகளிர் நல அலுவலர் - பணியிடம் -1

**தகுதிகள்:**

- மனிதவளம் மற்றும் சமூக அறிவியில் / சமூகப் பணியில் முதுநிலைப் பட்டம் - திட்டங்களைப் பற்றிய விழிப்புணர்வு
- மாவட்ட அளவில் தொடர்பு கொள்ள உள்ளூர் மொழி தேர்ச்சி மற்றும் பேச்சுத் திறன்.
- சமூகப் பணியில் பணியில் பணியாற்றிய அனுபவம்.
- கணினி கையாளும் திறன்.
- வயது 35க்கு மிகாமல்
- திருப்பூர் மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

மாவட்ட ஒருங்கிணைப்பாளர் - பணியிடம் - 2.

- மனிதவளம் மற்றும் சமூக அறிவியில் / சமூகப் பணியில் இளநிலைப் பட்டம் மற்றும் திட்டம் தொடர்புடைய விழிப்புணர்வு
- மாவட்ட அளவில் பெண்கள் தொடர்பான பிரச்சனைகப் பற்றி அறிந்திருக்க வேண்டும்.
- கணினி கையாளும் திறன்.
- வயது 35க்கு மிகாமல்
- திருப்பூர் மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

தகுதியான நபர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கீழ் கண்ட முகவரியில் 30.10.2019 அன்று மாலை 5.00 மணிக்குள் பதிவுத் தபால் / நேரடியாக சமர்ப்பிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.கே.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

தொடர்புக்கு : மாவட்ட சமூக நல அலுவலர்,
அறை எண். 35 மற்றும் 36, தரைத்தளம்
மாவட்ட ஆட்சியரகம், திருப்பூர் 641 604
போன்: 0421-2971168

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**